மார்ச் 16, 2023

அமைச்சர் விஜேசேகர, Uber பிராந்திய பணிப்பாளர் ஒர்கில், AmCham சபை உறுப்பினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் இனிய மாலை வணக்கம். இலங்கையில் எனது சொந்த மாநிலமான கலிபோர்னியாவைச் சேர்ந்த ஒரு சிறந்த அமெரிக்க நிறுவனமான Uber, மின்சார வாகனங்களில் தனது முதலீட்டை தொடங்குவதால், இன்றிரவு இங்கு வருவதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இவ்வாண்டு அமெரிக்காவிற்கும் இலங்கைக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளின் 75 ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கிறது. இந்த உறவு எவ்வாறு மக்கள், முன்னேற்றம் மற்றும் பங்காண்மை ஆகியவற்றின் அடிப்படையில் நிறுவப்பட்டுள்ளது என்பதற்கு Uber இன் இந்த EV முன்முயற்சி ஒரு சிறந்த உதாரணமாகும்.

முதலில், இந்த முயற்சியினை வெற்றியடையச் செய்வதற்காக இலங்கை அரசாங்கம் மேற்கொண்ட அனைத்து கடின உழைப்பினையும் நான் பாராட்ட விரும்புகிறேன். பொருளாதார மீட்சிக்கான அடித்தளத்தை அமைக்கும் வகையில் கடந்த வாரம், பிரதான இருதரப்பு கடன் வழங்குநர்கள் அனைவரிடமிருந்தும் போதுமான நிதியிடல் உத்தரவாதங்களைப் பெற்றுள்ளதாக IMF அறிக்கையிட்டதில் நாம் மகிழ்ச்சியடைந்தோம். அடுத்த வாரத்தில் இலங்கைக்கான ஒரு விரிவாக்கப்பட்ட நிதியளிப்பு வசதிக்கு IMF ஒப்புதல் அளிக்கலாம். இன்னும் அதிக பணிகள் உள்ளபோதும், வெற்றிகரமாக அமைந்தால், IMFஇன் உதவியானது மற்ற கடன் வழங்குநர்கள் நிதியளிப்புகளை மேற்கொள்வதை ஊக்குவிப்பதுடன் உறுதியான, நிலைபேறான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சிக்கான பாதையை அமைப்பதற்காக அதிக முதலீடுகளைத் தூண்டும் என எதிர்பார்க்கலாம். அது ஒரு நல்ல செய்தியாகும்.

ஒரு வருடத்திற்கும் குறைவான காலத்திற்கு முன்பு, பல நாட்கள் எரிபொருள் வரிசைகளால் தெருக்கள் அடைக்கப்பட்டிருந்த நிலையில், அவற்றின் முடிவைக் கற்பனை செய்வதே கடினமாக இருந்தது. சிறந்த எரிசக்திப் பாதுகாப்பிற்காக கடினமான ஆனால் அவசியமான சீர்திருத்தங்களை மேற்கொள்வதில் எரிசக்தி அமைச்சரின் விடாமுயற்சியையும், உறுதிப்பாட்டையும் மற்றும் இவ்வாறான சவால்களுக்கு ஏற்ப இசைவாக்கமடைவதற்காக Uber போன்ற நிறுவனங்கள் மேற்கொண்ட முயற்சிகளையும் நான் பாராட்டுகிறேன்.

அமெரிக்க நிறுவனங்களின் முதலீட்டினால் இலங்கையின் பொருளாதாரம் பாரிய நன்மைகளைப் பெறுகிறது. 70 இற்கும் மேற்பட்ட நாடுகளில் செயற்படும் Uber, புத்தாக்கம் மற்றும் நிலைத்தன்மை ஆகியவற்றில் ஒரு முன்னணி சக்தியாக விளங்குகிறது. நாம் அனைவரும் எவ்வாறு சிறப்பாக நகர முடியும் என்பதைத் தொடர்ந்து மறுபரிசீலனை செய்துகொண்டிருப்பதாக Uber இன் செயற்பணி வாக்கியம் கூறுகிறது. அத்துடன் 2040 ஆம் ஆண்டளவில் உலகளவில் கார்பன் நடுநிலைமையினை உருவாக்குவதற்கும் உறுதியளித்துள்ளது. இலங்கையின் பொருளாதாரத்தில் 81 பில்லியன் ரூபா பெறுமதியான பங்களிப்பை Uber வழங்கியுள்ளது. COVID பெருந்தொற்றின் போது சுகாதார ஊழியர்களுக்கு இலவச PPE மற்றும் சவாரிகளை Uber வழங்கியது. இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்துடன் இணைந்து உணவு மற்றும் மருந்துகளை கொண்டு செல்வதற்காக 200,000 அமெரிக்க டொலர்களை நன்கொடையாக வழங்கியதுடன் பல முன்முயற்சிகளுக்கு மத்தியில் இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சுடன் இணைந்து ஒரு தொழில்முனைவோர் சவால் திட்டத்திற்கும் Uber அனுசரணை வழங்கியது.

மின்சார வாகனங்கள் மற்றும் பெண்களின் பொருளாதார மேம்பாடு ஆகிய இரண்டிலும் முதலீடுகளை மேற்கொள்வதானது இன்னும் கூடுதலான வளர்ச்சியைத் தூண்டுவதற்கு மிகவும்

முக்கியமானவை என நான் உறுதியாக நம்புகிறேன். இது உலகம் முழுவதற்கும் பொருந்துமெனினும் குறிப்பாக இலங்கைக்கு இது முக்கியமானதாகும். ஆதலால்தான் இலங்கையின் மின்சாரத் துறையினை நிலைபேறான மற்றும் நம்பகமான சந்தை உந்துதல் அடிப்படையிலான ஒரு அமைப்பாக மாற்றுவதற்கு உதவுவதற்காக 19 மில்லியன் டொலர் பெறுமதியான USAID Sri Lanka Energy Program எனும் நிகழ்ச்சித்திட்டத்தை நாங்கள் தொடங்கினோம். அமைச்சர் விஜேசேகர அவர்களே, இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு உங்களது ஆதரவும் ஒத்துழைப்பும் மிகவும் முக்கியமானதாகும்.

இவ்வகையான முதலீடு குறிப்பிடத்தக்க பொருளாதார நன்மைகளைக் கொண்டுள்ளது. முதலாவதாக, புதிய வேலை வாய்ப்புகளை அது உருவாக்கும் மற்றும் பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்கும். உலகளாவிய மின்சார வாகன சந்தை எதிர்வரும் ஆண்டுகளில் வேகமாக வளர்ச்சியடைந்து 2030 ஆம் ஆண்டளவில் உலகளவில் விற்பனை செய்யப்படும் மொத்த வாகனங்களில் 30 சதவீதத்தை அது எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதற்கு மேலதிகமாக, மின்சார வாகனங்களில் முதலீடு செய்வதானது இலங்கையின் செலவுகளில் ஒரு குறிப்பிடத்தக்க தொகையினை சேமிப்பதற்கும் வழிவகுக்கும். பெட்ரோலில் அல்லது டீசலில் இயங்கும் பாரம்பரிய வாகனங்களை விட மின்சார வாகனங்கள் பயன்படுத்துவதற்கும் பராமரிப்பதற்கும் மலிவானவை. இலங்கையின் இறக்குமதிச் செலவினைக் குறைத்து ஏனைய பிற முன்னுரிமை விடயங்களுக்கு வளங்களை விடுவிப்பதற்கும் அவை உதவும்.

பொருளாதாரத்தை ஊக்குவிப்பதற்கு மட்டுமன்றி, சுற்றுச்சூழலுக்கும் மின்சார வாகனங்கள் சிறந்ததாகும். தற்போது, குறிப்பாக நகர்ப்புறங்களில் வளி மாசடைதல் மற்றும் போக்குவரத்து நெரிசல் தொடர்பான சவால்களை இலங்கை எதிர்கொள்கிறது. மின்சார வாகனங்கள் இந்தச் சவால்களுக்கு தூய்மையான மற்றும் நிலையான தீர்வை வழங்குகின்றன.

USAID’s Sri Lanka Energy Program நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் ஒரு மானியம் மூலமாக கொழும்பில் E-இருசக்கர வாகனங்கள் மற்றும் E-முச்சக்கர வண்டிகளுக்கான பொது மின்னேற்றல் நிலையங்களை அபிவிருத்திசெய்வதற்கு நாங்கள் உதவி செய்கிறோம். இலங்கையின் இலத்திரனியல் வாகன சந்தையை விரிவுபடுத்துவதற்கான அடித்தளமாக அணுகக்கூடிய மின்னேற்றல் உட்கட்டமைப்பு விளங்குகிறது. இந்த ஆரம்ப முயற்சியில் Uber மற்றும் அதன் பங்காளர்களுடன் நெருக்கமாகப் பணியாற்றுவதற்கு நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

நாடாளாவிய ரீதியில் உள்ள மின்சார வாகன நிலையங்களில் பாதுகாப்பு மற்றும் நம்பகத்தன்மையை உறுதி செய்யக்கூடிய மின்னேற்றல் நிலையங்களுக்கான பாதுகாப்புத் தரநிலைகள் மற்றும் பயன்பாட்டு வழிகாட்டுதல்களை உருவாக்குவதற்காக முக்கிய அரச அதிகாரசபைகள் மற்றும் இத்துறையினைச் சேர்ந்த தரப்பினர்களுடன் இணைந்து USAID பணியாற்றுகிறது.

இலங்கையின் மீட்சிக்கு பெண்களை வலுவூட்டுதல் மிகமுக்கியமானது எனவும் நான் குறிப்பிட்டேன். இலங்கையுடனான எங்களது பங்காண்மையில் அமெரிக்கா முன்னுரிமையளிக்கும் ஒரு விடயமாக அது இருப்பதுடன் பெண்களின் வரலாற்று மாதத்தின் போது மட்டுமன்றி ஆண்டு முழுவதும் கலந்துரையாடப்பட வேண்டிய ஒரு முக்கியமான விடயமாகவும் அது இருக்கிறது. தொழிலாளர் படையில் பெண்களுக்கு சம வாய்ப்புகளை உறுதி செய்வது சமூக நீதி தொடர்பான விடயம் மட்டுமன்றி, பொருளாதாரம் தொடர்பான

விடயமுமாகும். பெண் நிறைவேற்று அதிகாரிகளாக தன்ஷிகாவும், அதிராவும் இலங்கையில் Uber நிறுவனத்தை வழிநடாத்துவது மகிழ்ச்சியளிக்கிறது!

பெண்களுக்குச் சொந்தமான சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வணிகங்களை மையப்படுத்தி இலங்கையின் தனியார் துறையில் DFC என அறியப்படும் அமெரிக்க சர்வதேச அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபனத்தின் ஊடாக நாங்கள் முதலீடு செய்துள்ளோம். பெண்கள் மற்றும் இளவயது தொழில்முனைவோருக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்கும் நாங்கள் உதவி செய்கிறோம்.

இறுதியாக, அமெரிக்க முதலீடு எவ்வாறு குறிப்பிடத்தக்க பொருளாதார நன்மைகளையும் இலங்கை மக்களுக்கு ஒரு ஒளிமயமான எதிர்காலத்திற்கான வாய்ப்பினையும் வழங்க முடியும் என்பதை நிரூபித்தமைக்காக Uberஇற்கு மீண்டும் ஒரு முறை நான் நன்றி கூறவிரும்புகிறேன். புதிய வேலைவாய்ப்புகள், குறைந்த இறக்குமதிக் கட்டணங்கள், அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் நிலையான பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றுடன், மக்கள், முன்னேற்றம் மற்றும் பங்காண்மை பற்றி நாம் பேசும்போது நாம் எதைக் குறிப்பிடுகிறோம் என்பதை Uber நிரூபித்துக் காட்டுகிறது. அதையும் தாண்டி, உங்களது புதிய e-பைக் ஒன்றில் வீட்டிற்குச் செல்வதற்கு நீங்கள் எனக்கு உதவலாம். உங்களனைவருக்கும் மிக்க நன்றி.